**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No:27/2019 callwith OS No: 39/2021 தேதி:27.01.2025**

**வா.சா. 2 – நாகஜோதி**

**<u>குறுக்கு விசாரணை :</u>** ( 1, 4 மற்றும் 5 வது பிரதிவாதிகள் தரப்பில்)

என் பிரமாணவாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதி ராமசாமி என்பவர் வருவாய் துறையை ஏமாற்றி மோசடியாக பட்டா வாங்கியள்ளார் என்று சொல்லியுள்ளது பற்றி ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரத்திலேயே ருக்குமணியம்மாள் சொத்து என்று உள்ளது. எல்லாம்மாளுக்கு ருக்குமணியம்மாள் 7 1/2 செண்டு தெற்குபக்கம் விற்பனை செய்துள்ளார் மீது வடக்குபக்கம் உள்ள சொத்து ருக்குமணியம்மாள் சொத்தாகும். ருக்குமணியம்மாள் பெயரில் கிரையபத்திரமோ அல்லது பட்டாவோ உள்ளதா என்றால் கிரையபத்திரம் உள்ளது. ருக்குமணியம்மாள் பெயரில் உள்ள அந்த கிரையபத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்செய்துள்ளேன். ருக்குமணியம்மாள் பெயரில் பட்டாவோ, கிரையப்பத்திரமோ வழக்கு சொத்து சம்மந்தமாக பத்திரங்கள் எதுவும் இல்லை என்றும் அதனால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக ருக்குமணியம்மாள் பெயரில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ருக்குமணியம்மாள் 1964 ஆண்டு தன்னிச்சையாக மொத்த செண்டு 15 என்று குறிப்பிட்டு அதில் பாதி கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. யுடிஆருக்கு முன்பாகவே 25.04.1970 ல் ஒரு அடமானம் பத்திரம் எழுதியுள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது. வருவாய் துறை அதிகாரிகள் யுடிஆர் சர்வேயின் போது 7 1/2 செண்டு தான் ருக்குமணியம்மாளுக்கு பாத்தியம் என்று வருவாய்துறை ஆவணங்களில் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மீதமுள்ள 7 1/2 செண்டு 2ம் பிரதிவாதி பெயருக்கு 03.02.2009 அன்று பட்டா எண்.17 பட்டா கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் பிரமாணவாக்குமூலத்தில் 7 முதல் 10 பாராவில் வாதி வழக்கை தான் மறுத்துள்ளேன் என்றும் எனது வழக்கை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ருக்குமணியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்தவிதமான ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட

சொத்தில் நாங்கள் எந்தவிதமான உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள எந்தவிதமான பரிகாரும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி தரப்பில் எந்த பிரதிநிதித்துவம் இல்லாததால் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.